
# INTERNATIONAL YOGA DAY CELEBRATION

செய்திகள்

திருப்பூர் 22–6–2019 11



உடுமலை பள்ளி,கல்லூரியில்

## சர்வதேச யோகா தின விழா

உடுமலை.ஜூன்.22 - சர்வதேசயோகா தினத்தை யொட்டி உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி, ஸ்ரீவிசாலாட்சி மகளிர் மேல் நிலைப்பள்ளி ஆகியவற்றில் படிக்கும் தேசிய மாணவர் படை(என்.சி.சி.) மாணவிகள் கல்லூரிவளாகத்தில் உள்ள உள் விளையாட்டு அரங்கில் யோகாசன பயிற்சி செய்தனர். இந்த பயிற்சியை கல்லூரி முதல்வர்(பொறுப்பு) எஸ். கலைச்செல்வி

தொடங்கி வைத்தார். இதி
என்.சி.சி.மாணவிகள் 121பே
கலந்து கொண்டனர். இத
கான ஏற்பாடுகளை கல்லூ
யின் என்.சி.சி.அலுவல
பேராசிரியை லெப்டினன்
கர்னல். கற்ப
வல்லி,யோகா பயிற்றுன
பேராசிரிய்ய சத்யா,ஸ்ரீ விச
லாட்சி மகளிர் மேல்நிலை
பள்ளி என்.சி.சி. அலுவல
நர்மதா ஆகியோர் செய்
ருந்தனர். இதேபோன்று இந்
கல்லூரியில் முதலாம் ஆண்
பட்டப்படிப்பில் சேர்ந்துள்
மாணவிகளுக்கு கல்லூரியி
மதிப்புக்கல்வி ஒருங்கிணை
பாளர் பேராசிரியை கே.கா
யம்மாள்,பேராசிரியை
செண்பகவல்லி ஆகியோ
முன்னிலையில் யோகா பயி
சியளிக்க பட்டது. இதில் 9
மாணவிகள் கலந்து கொண்
னர். உடுமலை ராஜலட்சு
கெங்குசாமி மெட்ரிக்கு
சன் மேல்நிலைப்பள்ளியி
நடந்த யோகா பயிற்சியில் 7
மாணவ,மாணவிகள் கலந்
கொண்டனர். இ
போன்று உடுமலை தாலுக
அலுவலகத்தில் நடந்
யோகா பயிற்சியில் வருவா
துறை ஊழியர்கள் கலந்

# DISTRIBUTION OF APPOINTMENT ORDER

# 470 பேருக்கு பணி நியமன ஆணை

## அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் வழங்கினார்

உடுமலை,ஜூன்.30-
உடுமலையில் நடந்த தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 470 பேருக்கு அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

### வேலை வாய்ப்பு முகாம்

திருப்பூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (திருப்பூர்) ஆகியவற்றின் சார்பில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நேற்று உடுமலை ஸ்ரீஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நடந்தது.

முகாமில் திருப்பூர், சென்னை,கோவை,ஈரோடு உள்பட பல்வேறு ஊர்களில் உள்ள 95 நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது நிறுவனத்திற்கு தேவையான பணிகளுக்கு பயனாளிகளை தேர்வு செய்தனர்.வேலை வாய்ப்புக்காக வந்தவர்கள் ஒவ்வொரு பகுதியாக சென்று தங்களுக்கு பிடித்தமான நிறுவனங்கள்,பிடித்தமான பணிகள் ஆகியவற்றில் விண்ணப்பங்களைப் கொடுத்தனர்.



வேலை வாய்ப்பு பெற்ற வாலிபருக்கு பணி நியமன ஆணையை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் வழங்கியபோது எடுத்த படம். அருகில் கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளனர்.

### 470 பேருக்கு பணிநியமன ஆணைகள்

4 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்டவர்கள் வந்திருந்து பணி தேவை [illegible]றித்து விண்ணப்பத்தை கொடுத்து பெயரை பதிவு செய்தனர். இந்த முகாமில் பணிக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழா கல்லூரி கூட்ட அரங்கில் நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி தலைமை தாங்கி பேசினார். மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.சுகுமார் முன்னிலை வகித்து பேசினார். வேலை

லதா திட்ட வி
றினார். திருப்
வேலைவாய்ப்
ரா.ராதிகா வர
னார். விழாவி
470 பேருக்கு
உத்தரவு வழ
இதை கால்நடை
துறை அமைச்
கே.ராதாகிருஷ்
சிறப்புரையாற்

### நினைவ

அமைச்சர்
கே.ராதாகிருஷ்
டர் கே.எஸ். ப
ளிட்ட அதிகா
லூரி நிர்வாக
கல்லூரியின்
ஜி.ரவீந்திரன்
போர்த்தி ம
நினைவுப்பரி
னார். விழா
ஊரக வளர்
திட்ட இயக்கு
குமார் வாழ்த்
ஸ்ரீஜி.வி.ஜி.
மகளிர் கல்லூ
(பொறுப்பு)
செல்வி, மா
பால் நிறுவன
வக்கீல் கே.ம
திநகர் கூட்டுற
சங்கத்தலை
உடுமலை வே
பத்தியாளர்
விற்பனை ச
ஆர்.முருகேச
தேஜஸ் ரோ
லைவர் எஸ்.ந
பலர் கலந்து

# STUDENTS' UNION ELECTION

## ஜி.வி.ஜி., கல்லூரியில் மாணவர் பேரவை தேர்தல்



உடுமலை ஜி.வி.ஜி.,விசாலாட்சி கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தலில், ஆன்–லைனில் ஓட்டளிக்கும் மாணவியர்.

**உடுமலை, ஜூலை 6–**

உடுமலை, ஜி.வி. ஜி.,விசாலாட்சி கல்லூரியில் மாணவர் பேரவைத் தேர்தல் நடந்தது.

கல்லூரி பொறுப்பு முதல்வர் கலைச்செல்வி முன்னிலை வகித்தார். பேரவைத்தேர்தலில் 65 மாணவியர் போட்டியிட்டனர்; 1,670 மாணவியர் தேர்தலில் ஓட்டளித்தனர்.

மூன்றாமாண்டு வரலாற்றுத்துறை மாணவி ஆயிஷா கல்லூரி பேரவைத் தலைவராகவும், மூன்றாமாண்டு வணிகவியல் துறை மாணவி மஞ்சுளாதேவி செயலாளராகவும், மூன்றாமாண்டு வணிகவியல் கம்ப்யூட்டர் பயன்பாட்டு துறை மாணவி நிக்கிதா இணைச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்தலுக்கான ஏற்பாடுகளை மாணவியர் பேரவை ஒருங்கிணைப்பாளரும், இயற்பியல் துறை பேராசிரியர் நிர்மலா மற்றும் உறுப்பினர்களும் செய்திருந்தனர்.

வெற்றி பெற்ற மாணவியருக்கு கல்லூரி நிர்வாகத்தினர் பாராட்டு தெரிவித்தனர்.

# AWARENESS RALLY AGAINST PLASTIC IN THUNGAVI



### துங்காவி பகுதியில்

## பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

மடத்துக்குளம், ஜூலை. 11-

மடத்துக்குளம் அருகே உள்ள துங்காவி ஊராட்சி பகுதியில் பிரதம மந்திரி ஸ்வச் பாரத் திட்டத்தின் கீழ்,

பிளாஸ்டிக் பொருட்களை பொதுமக்கள் பயன்படுத்த கூடாது என்பதை வலியுறுத்தி பிளாஸ்டிக், ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் உடுமலையை சேர்ந்த ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் 30-க்கும் மேற்பட்ட, நாட்டு நலப்பணித்திட்ட மாணவிக்ள் மற்றும் அலுவலர்கள் திரளாக கலந்து கொண்டனர். கல்லூரியை சேர்ந்த பேராசிரியைகள் அபிராமி, மலர்விழி, ஆகியோர் கலந்து கொண்டனர். பேரணியில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தினால் ஏற்படும் தீமைகளை குறித்த விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி சென்றனர். அவர்கள் துங்காவி ஊராட்சி பகுதியில் உள்ள முக்கிய வீதிகள் மற்றும் பஸ் நிலையம் ஆகிய இடங்களுக்கு சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# AWARENESS ON RAINWATER HARVESTING IN KOMARILINGAM



30.7.19 குமாரமங்கலத்தில் Pg:No:8

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

மடத்துக்குளம், ஜூலை.20–

மடத்துக்குளம் அருகே உள்ள துங்காவி ஊராட்சிக்கு உட்பட்ட குமாரமங்கலம் பகுதியில் பண்ணைக்குட்டைகள் மூலமாக மழைநீரை சேமிப்பது குறித்தும், வீடுகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் குறித்தும் உடுமலை ஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியின் சார்பில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. துங்காவி ஊராட்சிக்கு உட்பட்ட குமாரமங்கலம் பகுதியில் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் பேராசிரியர்கள் மலர்விழி மற்றும் அபிராமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மேலும் மகளிர் கல்லூரியின் சார்பில் 20–க்கும் மேற்பட்ட கல்லூரியின் மாணவிகள் கலந்து கொண்டு, குமாரமங்கலம் பகுதியில் உள்ள அரசு தொடக்க பள்ளியில் உள்ள மாணவ–மாணவிகளுக்கு மழைநீர் சேகரிப்பு குறித்த அவசியத்தையும், அதன் பயன்களையும் விளக்கி கூறினர். மேலும் மாணவ–மாணவிகள் பொது இடங்களில் மலம் கழிக்கும் பழக்கத்தை கைவிட்டு, கழிவறையை பயன்படுத்துதல் குறித்த அவசியத்தையும் எடுத்து கூறினர். இதையடுத்து குமாரமங்கலம் பகுதியில் உள்ள முக்கிய வீதிகளின் வழியாக கல்லூரி மாணவிகள் ஊர்வலமாக சென்றனர். ஊர்வலத்தில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்களை எழுதிய பதாகைகளை கையில் ஏந்தியபடி, பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கோஷமிட்டு சென்றனர்.

தினத்தந்தி

# INAUGURATION CEREMONY

25. 7. 19 Pg: No: 2

## கல்லூரியில் பேரவை துவக்க விழா



விழாவில் பொறுப்பேற்றுக்கொண்ட பேரவை மற்றும் மன்றங்களின் நிர்வாகிகள்.

**உடுமலை, ஜூலை 24:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் பேரவை மற்றும் மன்றங்கள் துவக்க விழா புதன்கிழமை நடைபெற்றது.

ஜிவிஜி கலையரங்கில் நடைபெற்ற விழாவுக்கு கல்லூரிச் செயலர் கெ.ரவீந்திரன் தலைமை வகித்தார். பேராசிரியர் ப.நிர்மலா வரவேற்றார். கல்லூரி மாணவர் பேரவைத் தலைவி ஹா.ஆயிசா ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் தமிழக அரசின் நிதித் துறை செயலாளர் ஆர்.ஆனந்தகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார்.

இதையடுத்து பேரவை மற்றும் மன்றங்கள் துவங்கப்பட்டு நிர்வாகிகள் பொறுப்பேற்றுக் கொண்டனர். கல்லூரி முதல்வர் எஸ்.கலைச்செல்வி உறுதி மொழி வாசிக்க மாணவிகள் அதை வழிமொழிந்தனர். பேராசிரியர்கள், மாணவியர் விழாவில் கலந்து கொண்டனர். பேரவைச் செயலர் மஞ்சுளாதேவி நன்றி கூறினார்.

# PLANTING TREE SAPLING CEREMONY IN MADATHUKULAM



மடத்துக்குளத்தில்

## மரக்கன்று நடும் விழா

மடத்துக்குளம்,ஆக.3–

மடத்துக்குளம் தேர்வு நிலை பேரூராட்சி சார்பில் மடத்துக்குளம் பகுதியில் உள்ள முக்கிய வீதிகளில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி மற்றும் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. விழாவுக்கு மடத்துக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் ருக்மணி தலைமை தாங்கினார். உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியின் பேராசிரியை கீதா, கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் 50-க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

மடத்துக்குளம் பகுதியில் உள்ள தாசில்தார் அலுவலக வளாகம், பேரூராட்சி அலுவலக வளாகம், அரசு மருத்துவமனை வளாகம், பஸ் நிலையம், விளையாட்டு மைதானம், ரெயில் நிலையம், மடத்துக்குளம்–குமரலிங்கம் சாலை, உடுமலை–பழனி சாலை,கார்த்தொழுவு–மடத்துக்குளம் சாலை ஆகிய இடங்களில் மா, வேப்பம், புங்கை, போன்ற பல்வேறு மரக்கன்றுகளை மாணவ–மாணவிகள் நட்டனர். பின்னர் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக உடுமலை–பழனி தேசிய சாலையில் ஊர்வலமாகவும் சென்றனர். முன்னதாக மடத்துக்குளம் தாசில்தார் அலுவலகத்தில் நடைபெற்ற மரக்கன்று நடும் விழாவில் மடத்துக்குளம் தாசில்தார் பழனியம்மாள் மற்றும் துணை தாசில்தார் அருள்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# NATIONAL TALENT COMPETITION

## தேசிய திறனறி போட்டி 250 மாணவர்கள் பங்கேற்பு

Pg.100

**உடுமலை, ஆக. 11–**

உடுமலை, ஜி.வி.ஜி., விசாலாட்சி கல்லூரியில், மாணவர்களுக்கான தேசிய திறனறிப் போட்டி நடந்தது.

இந்திய இயற்பியல் கழகம் சார்பில், தேசிய அளவில், 22 மையங்களில் அறிவியல் திறனறிப்போட்டி நடந்தது. இப்போட்டி, உடுமலை, மடத்துக்குளம், பழநி தாலுகாவில் உள்ளவர்களுக்கு, உடுமலை ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் நடந்தது.

போட்டியில், 250 மாணவர்கள் பங்கேற்றனர். இப்போட்டியின் முடிவுகள் அடிப்படையில், 20 பேர் இரண்டாவது மற்றும் மூன்றாவது சுற்றுகளில் பங்கேற்கும் வாய்ப்பை பெறுகின்றனர்.

அடுத்தகட்ட போட்டிகள் ஆக., இறுதி வாரத்தில் இந்த மையத்தில் நடக்கிறது. அந்த தேர்வுகளில் வெற்றி பெறுபவர்களுக்கு, செப்., மாதம் கான்பூரில் தேர்வு நடக்கிறது.

தேசிய அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு, முதல் பரிசாக, ஐந்தாயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக, மூவாயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக, இரண்டாயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது.

# INDEPENDENCE DAY CELEBRATION



# உடுமலையில் சுதந்திர தின விழா கோலாகலம்

**உடுமலை, ஆக. 16–** உடுமலையில் பள்ளி, கல்லூரிகளில் சுதந்திர தின விழா, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளோடு கோலாகலமாக நடந்தது.

**பூலாங்கிணறு**

அரசு மேல்நிலைப்பள்ளியில் நடந்த 73வது சுதந்திர தின விழாவில், பள்ளி பொறுப்பு தலைமையாசிரியர் சந்திரன், நாட்டுநலப்பணி திட்ட அலுவலர் சரவணன், ஆசிரியர்கள் மோனிகா, செந்தில்குமார் ரத்னசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். விழிப்புணர்வு நாடகங்கள், தேசபக்தி பாடல்கள் மற்றும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

உடுமலை, ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடந்த விழாவில், பள்ளி இயக்குனர் ரங்கசாமி, பள்ளி நிர்வாகி சுப்ரமணியம், முதல்வர் ஜீவராஜ் அலெக்சாண்டர், துணை முதல்வர் ஜோதிலட்சுமி மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

உடுமலை, ருத்ரப்பநகர், மலைவாழ் மாணவர்களுக்கான உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி மையத்தில் நடந்த விழாவில் மைய பொறுப்பாளர் ரமேஷ், ஒன்றிய மேலாளர் ரவி, அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவ அலுவலர் முருகன் பங்கேற்றனர். உடுமலை, பழனியாண்டவர் நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளி விழாவில், சண்முகம் கொடியேற்றினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது.

**குறிச்சிக்கோட்டை**

ஆர்.வி.ஜி., மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது. 'கலை நாள்', தினம், பெற்றோர்களுக்கான போட்டிகள் நடந்தது.

பாரதியார் நூற்றாண்டு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடந்த விழாவிற்கு, தலைமையாசிரியர் விஜயலட்சுமி, முன்னாள் தலைமையாசிரியர் கிருஷ்ணன், தமிழாசிரியர் சின்னராஜ் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

பள்ளியின் முன்னாள் மாணவர் சங்கத்தினர், பிளஸ் 2 மற்றும் பத்தாம் வகுப்பில் சிறப்பிடம் பெற்ற மாணவர்கள், காமராஜர் விருது பெற்ற மாணவிக்கு பரிசுத்தொகை வழங்கினார்.

உடுமலை, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விழாவில், தலைமையாசிரியர் ராஜசேகரன், ஆசிரியர் சிவக்குமார், முப்படைகளில் பணியாற்றிய சக்தி, செந்தில்குமார், மோகன கிருஷ்ணன், பிரபு, ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உடுமலை, எஸ்.கே.பி., மேல்நிலைப்பள்ளியில், தலைமையாசிரியர் பூரணி, செயலாளர் ராதாகிருஷ்ணன். ஆசிரியர்கள் காளியம்மாள், அன்பரசு, விஜயகுமார் பங்கேற்றனர்.

**ராகல்பாவி**

ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடந்த, சுதந்திர தின விழாவில் தலைமையாசிரியர் சாவித்திரி, கண்ணபிரான் பங்கேற்றனர். குழந்தைகளின் நடனம், இசை, நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

வித்யாசாகர் கலை அறிவியல் கல்லூரியில் நடந்த விழாவில், அறங்காவலர் விக்ரம், முதல்வர் மருதுபாண்டியன், பேராசிரியர்கள் செல்லதுரை, பிரகாஷ், சண்முகராஜா பங்கேற்றனர்.

வித்ய நேத்ரா மெட்ரிக் பள்ளியில், மரக்கன்றுகள் நடப்பட்டன.

கலை இலக்கியப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி விழாவில் மாணவிகள் அணிவகுப்பு, உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது.

அமராவதிநகர் சைனிக் பள்ளியில் நடந்த சுதந்திர தின விழாவில், பள்ளி முதல்வர் குரூப் கேப்டன் சிதானா தேசிய கொடி ஏற்றினார். மாணவர்கள் அணிவகுப்பு மரியாதை நடத்தினர். பள்ளி நிர்வாக அதிகாரி அமித் குர்குரே, லெப்டினன்ட் கர்னல் நிர்பேந்தரா, மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் பங்கேற்றனர்.

**குப்பம்பாளையம்**

அரசு உயர்நிலைப்பள்ளியில் நடந்த விழாவில், தலைமையாசிரியை சிலம்புசெல்வி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் தாமோதரன், பாசன சபை தலைவர் மாரியப்பன் பங்கேற்றனர்.

ருத்ரவேணி பாலிடெக்னிக் கல்லூரியில், கல்லூரி இயக்குனர் சுமதி, முதல்வர் கண்ணன், டீன் ராமநாதன் பங்கேற்றனர்.

உடுமலை விசாலாட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தலைமையாசிரியை திலகாம்பாள், என்.சி.சி., அலுவலர் நர்மதா பங்கேற்றனர். மாணவியருக்கு மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு, மரக்கன்றுகள் நடப்பட்டன.

உடுமலை, தாராபுரம் ரோடு அனுக்கிரகா பள்ளியில், பள்ளி தாளாளர் அருள்செல்வன் தேசிய கொடி ஏற்றினார்.

உடுமலை அரசு கலைக் கல்லூரியில், முன்னாள் மாணவர் சங்க அறக்கட்டளையின் சார்பில் மாணவர்களுக்கு விருது வழங்கும் விழா நடந்தது. சங்க செயலாளர் ஆடிட்டர் கந்தசாமி வரவேற்றார். கல்லூரி பொறுப்பு முதல்வர் பொன்முடி தலைமை வகித்தார். கல்லூரி முன்னாள் மாணவர் பாலசுப்ரமணியம் முன்னிலை வகித்தார்.

**ஆனைமலை**

புலிகள் காப்பக உதவி இயக்குனர் கணேஷ்ராம், கல்லூரியில் துறைவாரியாக சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள் வழங்கி பாராட்டினார்.

பாரதியார் பல்கலைக்கழக தேர்வில் சிறப்பிடம் பெற்ற, 22 மாணவர்களுக்கு தலா, இரண்டாயிரம் ரூபாய் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சங்க உறுப்பினர் ராஜேந்திரன் நன்றி கூறினார். முன்னாள் மாணவர் சங்கத்தினர் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் விழாவில் பங்கேற்றனர்.

உடுமலை, தேஜஸ் ரோட்டரி சங்கம், ஸ்கேட்டிங் அகாடமி இணைந்து ராணுவ வீரர்களை பெருமைப்படுத்தும் வகையில் சிறப்பு நிகழ்ச்சி நடத்தினர். ஸ்கேட்டிங் அகாடமி மாணவர்கள் மூவர்ண கொடியின் வண்ணத்தில் உடை அணிந்து, நகரில் ஸ்கேட்டிங் செய்து பேரணி சென்றனர். இந்திய மருத்துவ சங்கத்தலைவர் டாக்டர் சுந்தரராஜன் துவக்கி வைத்தார். தேஜஸ் ரோட்டரி சங்கத் தலைவர் ரவி ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

'மழை உடுமலை' சார்பில், சுதந்திர தின விழா, இரண்டாம் ஆண்டு துவக்க விழா மற்றும் மரக்கன்று நடும் விழா மைவாடியில் நடந்தது.

நேற்று காலை, மைவாடியில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

அரசு நடுநிலைப்பள்ளியில் தேசிய கொடியேற்றி மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. உடுமலை–பொள்ளாச்சி தேசிய நெடுஞ்சாலை, மையத்தடுப்புகளில் 225 அரளிச்செடிகள் நடப்பட்டன. இதில் தன்னார்வ அமைப்புகள், பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

உடுமலை சிவசக்தி காலனி விரிவாக்கம் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பில், சுதந்திர தின விழா கொடியேற்று விழா நடந்தது. பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், முன்னாள் நகராட்சி பள்ளிகள் மேற்பார்வையாளர் நடராஜன், குடியிருப்போர் நலச்சங்கத்தலைவர் சந்திரன், நிர்வாகிகள் முருகேஷ்குமார், கோபாலன், ராமசாமி, மோகன்ராஜ், சிவக்குமார், முபாரக் உசேன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உடுமலை, இரண்டாம் கிளை நூலகத்தில், விழாவையொட்டி நூலக வாசகர் வட்டத்துணைத்தலைவர் சிவக்குமார், நூலகர் கணேசன், கனரா வங்கி முன்னாள் மேலாளர் பாலு, வாசகர் வட்ட ஆலோசகர் அய்யப்பன், நூலகர் மகேந்திரன் பங்கேற்றனர். வாசிப்பை நேசிப்போம் வாகன பேரணி மற்றும் சுதந்திர தின விழா போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பெதப்பம்பட்டி ஆர்.ஜி.எம்., மேல்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியர் லட்சுமி தேசிய கொடியேற்றினார். மாணவர்கள் அணிவகுப்பு மரியாதை, கலைநிகழ்ச்சிகள் நடந்தன. உடுமலை, சின்னவீரம்பட்டி, உடுக்கம்பாளையம், ராஜேந்திரா ரோடு அரசு மேல்நிலைப்பள்ளி, உட்பட அனைத்து பள்ளிகளிலும் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

உடுமலை ... அலுவலகம், தாலுகா அலுவலகம், ஒன்றிய அலுவலகம், நகராட்சி, கிளைச்சிறை, நீதிமன்ற வளாகம், அரசு மருத்துவமனை, வனத்துறை அலுவலகம், போலீஸ் ஸ்டேஷன் உட்பட அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தேசிய கொடி ஏற்றப்பட்டு விழா நடந்தது.

**மடத்துக்குளம்**

மடத்துக்குளம் பகுதியில் சுதந்திரதின விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

தாலுகா அலுவலகத்தில் தாசில்தார் பழனியம்மாள் கொடியேற்றினார். துங்காவி கிராமத்தில், நாட்டு நலப்பணித்திட்டத்தில் ஈடுபட்டு உள்ள ஜி.வி.ஜி., கல்லூரி மாணவிகள் மற்றும் அப்துல்கலாம் அறக்கட்டளை சார்பில் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு நடனம், பேச்சு, விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

வேடபட்டி அரசு நடுநிலை பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு, அம்மா அறக்கட்டளை சார்பாக பேனா, பென்சில்கள் வழங்கப்பட்டன.

மடத்துக்குளம் பேரூராட்சியில் ... கணியூர், சங்கராமநல்லூர், கொமரலிங்கம் பேரூராட்சி அலுவலகங்களில் சுதந்திரதின விழா நடந்தது.

அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் பத்தாம் ... வகுப்புகளில் அதிக

ராமசாமி நகர் நகராட்சி ந...

# TAMIL LITERARY COMPETITION

## கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் இலக்கிய போட்டி

**உடுமலை, செப். 5–**

ஜி.வி.ஜி.,விசாலாட்சி பெண்கள் கல்லூரி தமிழ் துறை மற்றும் 'பெண்' அமைப்பு சார்பில், கல்லூரி மாணவர்களுக்கான இலக்கிய போட்டிகள், நாளை, (6ம் தேதி) கல்லூரி கூட்ட அரங்கில் நடக்கிறது.

தமிழில் கவிதை, பேச்சு, மற்றும் சொல் விளையாட்டுப் போட்டிகள் நடக்கிறது. போட்டிக்கான விதிமுறைகள் மற்றும் பங்கேற்பு குறித்து கல்லூரி அலுவலகத்தில் அல்லது, ஒருங்கிணைப்பாளர்கள், 94866 13580, 96552 62187 என்ற எண்களை தொடர்பு கொண்டு தகவல் அறிந்து கொள்ளலாம். முதல் பரிசாக ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக, 750 ரூபாய், மூன்றாம் பரிசாக 500 ரூபாயும் வழங்கப்படுகிறது.

# SANITARY WORK BY NCC STUDENTS



உடுமலையில்

## நகராட்சி சார்பில் முழு சுகாதாரப்பணிகள்

### என்.சி.சி. மாணவிகள் பங்கேற்பு

உடுமலை, டிச.11-

உடுமலை நகராட்சி சுகாதாரப் பிரிவு சார்பில்,"தூய்மை இந்தியா" திட்டத்தில் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உடுமலை அண்ணா குடியிருப்பு பகுதியில் முழு சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் உடுமலை ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி மற்றும் ஸ்ரீ விசாலாட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி என்.சி.சி.மாணவிகள் கலந்து கொண்டு சுகாதாரப்பணிகளை மேற்கொண்டதுடன் அந்தப்பகுதியில் காணப்பட்ட குப்பைகளை அகற்றினர்.

மேலும் அந்த பகுதியில் வளர்ந்திருந்த செடிகளை அகற்றி அந்த பகுதியை சுத்தம் செய்தனர். குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரித்து துப்புரவுப்பணியாளர்களிடம் வழங்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். உடுமலை நகராட்சி ஆணையாளர் பவுன்ராஜ் ஆலோசனைப்படி நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் ஸ்ரீஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரி, ஸ்ரீவிசாலாட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி என்.சி.சி. அலுவலர்கள் ஆகியோர் முன்னிலையில் இந்த சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

# LEGAL AWARENESS CAMP



உடுமலையில்

சட்ட விழிப்புணர்வு முகாம்

உடுமலை,டிச..

டுமலை வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் உடுமல
ஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரியில் சட்ட விழிப்
ர்வு முகாம் கல்லூரியின் கூட்ட அரங்கில் நடந்தது. மு
கு உடுமலை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிப
ராஜா தலைமை தாங்கி பேசினார். உடுமலை ஜுடிசிய
ஜிஸ்திரேட்டு பி.முருகன் முன்னிலை வகித்து பேசினா
லூரி முதல்வர் (பொறுப்பு) எஸ்.கலைச்செல்வி வரவேற்
சினார். பேராசிரியை சுந்தரிபாய் நன்றி கூறினார்.
முகாமில் உடுமலை வக்கீல்கள் சங்கத்தலைவர் பி.ஏ.எ
தரம்,வக்கீல்கள் செந்தில்குமார், கிருஷ்ணன்,நிசா
பு,தம்பி பிரபாகரன்,சத்தியவாணி,சித்ரா,சரஸ்வதி மற்று
ணவிகள் கலந்துகொண்டனர்.

# PONGAL CELEBRATION



**பொங்கல் விழா**

## உடுமலையில் பள்ளி, கல்லூரிகளில்...



ஜிவிஜி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவை நடத்திவைக்கிறார் கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன்.

**உடுமலை, ஜன.13:** உடுமலையில் உள்ள பல்வேறு பள்ளி, கல்லூரிகளில்
பொங்கல் விழா திங்கள்கிழமை கொண்டாடப்பட்டது.
**ஜிவிஜி கல்லூரி:** உடுமலை ஜிவிஜி கலை அறிவியல் கல்லூரியில் நடை
பெற்ற பொங்கல் விழாவுக்கு கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன் தலைமை
வகித்தார். முதல்வர் எஸ்.கலைச்செல்வி முன்னிலை வகித்தார். இதில்
மாணவிகளின் கும்மியாட்டம், கோலாட்டம், கம்பு சுற்றுதல் உள்
ளிட்ட கலை நிகழ்ச்சிகளும், உறியடித்தல், கயிறு இழுத்தல் போன்ற
விளையாட்டுகளும் நடைபெற்றன. பின்னர் பொங்கல் வைத்து கொண்
டாடினர். பேரவை ஒருங்கிணைப்பாளர் பி.நிர்மலா, மன்ற உறுப்பினர்
கள் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.
**ருத்ரவேணி பாலிடெக்னிக் கல்லூரி:** பாலப்பம்பட்டி ருத்ரவேணி முத்
துசாமி பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவை
ஒட்டி கல்லூரி வளாகத்தில் மாக்கோலமிட்டு மாவிலைத் தோரணங்
கள் கட்டப்பட்டிருந்தன. திறந்த வெளியில் புது அடுப்பு மூட்டப்பட்டு
மண் பானையில் பொங்கல் வைத்து, சூரியனுக்கு படையலிடப்பட்
டது.
அப்போது மாணவ, மாணவிகள் 'பொங்கலோ பொங்கல்' என
முழுக்கமிட்டு, பொங்கல் விழாவை கொண்டாடினர். தமிழர் முறைப்
படி கோலாட்டம், விடுகதை பாடல், சிலம்பாட்டம், குறவன் குறத்தி
ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளை நடத்தினர்.
விழாவில் ஆசிரியர்களும் பாரம்பரிய தமிழர் உடை அணிந்து கலந்து
கொண்டனர். கல்லூரி இயக்குநர் சுமதி கிருஷ்ணபிரசாத், ஆலோசகர்
டாக்டர் ஜெ.மஞ்சுளா, ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.
**ஆர்விஜி மேல்நிலைப் பள்ளி:** உடுமலையை அடுத்துள்ள குறிச்சிக்
கோட்டை ஆர்விஜி மேல்நிலைப் பள்ளியில் பொங்கல் விழா திங்கள்
கிழமை கொண்டாடப்பட்டது. பள்ளித் தாளாளர் விமலா தலைமை
வகித்தார். செயலர் சந்தோஷ் முன்னிலை வகித்தார். விழாவில் தேவ
ராட்டம், தப்பாட்டம், கும்மியாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள்
நடைபெற்றன.
உரியடித்தல், சிலம்பம் போன்ற விளையாட்டு போட்டிகளும் நடை
பெற்றன. பின்னர் புகையில்லா போகி பண்டிகை உறுதிமொழி எடுத்
துக்கொள்ளப்பட்டது. தலைமை ஆசிரியர் ஜனார்த்தனன், ஆசிரியர்
கள் விழாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# PONGAL CELEBRATION

## கல்லூரிகளில் பொங்க

உடுமலை, ஜன. 14–

உடுமலை கல்வி மாவட்ட பள்ளி, மற்றும் கல்லூரிகளில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பொங்கல் விழா கொண்டாடும் விதமாக, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து, பொங்கல் வைத்தும், கலைநிகழ்ச்சிகளும் நடத்தினர்.

சோமவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், பொங்கல் விழா நடந்தது.

இதில் மாவட்ட ஊராட்சி கவுன்சிலர் பாண்டியன், குடிமங்கலம் ஒன்றியக்குழு தலைவர் சுகந்தி, ஊராட்சித்தலைவர் விமலா, தலைமையாசிரியர் கோப்பெருந்தேவி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் பங்கேற்றனர்.

ஆசிரியர்கள், பொங்கல் பண்டிகை கொண்டாடுவதன் முக்கியத்துவம் குறித்து பேசினர்.

ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், பொங்கல் பண்டிகையையொட்டி, மாணவியர் பாரம்பரிய உடை



உடுமலை ஜி.வி.ஜி. மகளிர் கல்லூரியில், பொங்கல் விழா கொண்
சமத்துவ பொங்கல் விழா நடந்தது.

அணிந்து, குலவைவிட்டு, கல்லூரி முதல்வர் கலைச்செல்வி, பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி செயலாளர் ரவீந்திரன் முன்னிலையில் பொங்கல் வைத்தனர்.

கோமாதா பூஜை நடத்தினர். தொடர்ந்து மாணவியரின், கும்மியாட்டம், கோலாட்டம், கம்பு சுற்றுதல், நடன நிகழ்ச்சி மற்றும் உறியடி, கயிறு இழுத்தல் போட்டி நடந்தது.

உடுமலை, வட்டார கல்வி அலுவலகத்தில், அலுவலர்கள், சரவணக்குமார், பிரிட்டோ மற்றும் பணியாளர்கள், பொங்கல் வைத்து கொண்டாடினர்.

**சமத்துவ பொங்கல்**

பாரம்பரிய கலைகளோடு, சமத்துவ பொங்கல் விழா,
சந்திர மிஷன்
கொண்டாட

உடுமலை
பாங்க் ஆ
(விவசாய
கிளை, சே
உற்பத்தியா
சார்பில், சம
கல் விழா (
பட்டது.

வங்கி கி

# BOOK FAIR

## உடுமலை கல்லூரியில் புத்தக கண்காட்சி

**உடுமலை, ஜன. 21–**

உடுமலை, ஜி.வி.ஜி., கல்லூரியில் புத்தக கண்காட்சி நடந்தது.

உடுமலை பழநி ரோட்டில் ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி உள்ளது. இக்கல்லூரி நூலகம், கோவை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து, புத்தகக்கண்காட்சியை நடத்தியது.

கல்லூரி முதல்வர் பொறுப்பு கலைச்செல்வி துவக்கி வைத்தார். கண்காட்சியில் இலக்கியம், விவசாயம், பொது அறிவு, வரலாறு, சிறுகதை, கைத்தொழில், இணையம், கம்ப்யூட்டர், வாழ்க்கை வரலாறு, அரசியல் குறித்த, பல நூல்கள் காட்சிபடுத்தப்பட்டன.மாணவர்கள், பேராசிரியர்கள், நூல்களை பெற்றுச்சென்றனர்.

நிகழ்ச்சியில், கல்லூரி மாணவியர், பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

21/1/20 Pg No:

# BOOK EXHIBITION IN COLLABRATION WITH COIMBATORE NEW CENTURY BOOK HOUSE

## ஜிவிஜி விசாலாட்சி கல்லூரியில்

# புத்தக கண்காட்சி



► உடுமலை ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் புத்தக கண்காட்சி நடைபெற்றது.

**உடுமலை, ஜன.22:** உடுமலை ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் புத்தக கண்காட்சி நடைபெற்றது.

உடுமலை ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் நூலகமும், கோவை நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்சும் இணைந்து கடந்த 2ம் தேதி முதல் 4 நாட்கள் புத்தக கண்காட்சியை கல்லூரியில் நடத்தியது. கண்காட்சியை கல்லூரி முதல்வர் கலைச்செல்வி துவக்கி வைத்தார். இதில் இலக்கியம், விவசாயம், பொது அறிவு, வரலாறு, தொழில்நுட்பம், சிறுகதை, அகராதி, கைத்தொழில், இணையம், கணினி, தலைவர்கள் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம்பெற்றிருந்தன.

இக்கண்காட்சியை கல்லூரி பேராசிரியர்களும், மாணவிகளும் கண்டு பயன் பெற்றனர்.

# HUMANITARIAN WEEK FESTIVAL

ர செய்திகள்

திருப்பூர் 28–1–2020 21



மனித நேய வார விழா நடைபெற்ற போது எடுத்தபடம்.

## உடுமலையில்

# மனித நேய வாரவிழா

உடுமலை,ஜன.28-
உடுமலையில் மனிதநேய வார விழா நடைபெற்றது.

### மனித நேய வாரவிழா

திருப்பூர் மாவட்ட காவல் துறை சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் சார்பில் மனிதநேய வாரவிழா உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி கூட்ட அரங்கில் நடந்தது. கூட்டத்திற்கு ஆர்.டி.ஓ. ஆர். ரவிக்குமார் தலைமை தாங்கினார். மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு க.குணசேகரன் முன்னிலை வகித்தார். சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை போலீஸ் சூப்பிரண்டு வி.சே.கலிவரதன் வரவேற்றார்.

விழாவில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு போலீஸ் உதவி கமிஷனர் டி.சுரேஷ், உடுமலை விவேகானந்தா வித்யாலயா பள்ளி தாளாளர் எஸ்.மூர்த்தி, வக்கீல் அன்புச்செழியன் உள்பட பலர் பேசினர். விழாவில் தாசில்தார் கே.தயானந்தன், ஸ்ரீ ஜி.வி.ஜி.விசாலாட்சி மகளிர் கல்லூரி முதல்வர்(பொறுப்பு) எஸ்.கலைச்செல்வி,போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் முருகேசன் (உடுமலை), சுப்பராமன்(போக்குவரத்து), ஓம்பிரகாஷ் (குடிமங்கலம்), சாந்தி (அனைத்து மகளிர் காவல் நிலையம்), மகேஷ்வரி(தளி) மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பேராசிரியைகள் கலந்து கொண்டனர்.

### பரிசு

விழாவில் காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ள காவலன் செயலியால் பெண்களுக்குரிய பாதுகாப்பு குறித்த நாடகம், விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக்காப்பாற்ற வேண்டிய மனிதநேய செயல்கள் குறித்த நாடகம் ஆகியவை நடந்தன. இதில் பங்கேற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# NSS CAMP

## நாட்டு நலப்பணித்திட்ட முகாம் மாணவியர் உழவாரப்பணி

**மடத்துக்குளம், பிப். 3–**

மடத்துக்குளம் அருகே துங்காவியில் கல்லூரி மாணவியர் பங்கேற்ற நாட்டு நலப்பணி திட்ட முகாம் நடந்தது.

உடுமலை ஜி.வி.ஜி., மகளிர் கல்லூரி மாணவிகள் பங்கேற்கும் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் துங்காவியில் நடக்கிறது இதில், நேற்றுமுன்தினம் காலை, பஸ் ஸ்டாப் அருகில் உள்ள காளியம்மன் கோவிலில் உழவாரப் பணியில் மாணவியர் ஈடுபட்டனர். தொடர்ந்து உடுமலை பிரியா நர்சிங் மற்றும் பாரா மெடிக்கல் கல்லூரியுடன் இணைந்து, இலவச பொது மருத்துவ முகாம் நடத்தினர்.

துங்காவி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடந்த இந்த முகாமில், 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர். உடுமலை இந்திய மருத்துவ சங்கத்திலிருந்து, சிறப்பு மருத்துவர்கள் மக்களுக்கு சிகிச்சை அளித்தனர்.


பின்னர் நடந்த பேரணியில், வாழ்வியல் நெறி முறைகள், தூய்மை இந்தியா, பணமில்லா பரிவர்த்தனைகள் குறித்து விழிப்புணர்வு கருத்துக்களை மாணவியர் வலியுறுத்தினர். பஸ் ஸ்டாப் தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக பேரணி சென்று திரும்பியது. இந்த முகாமை கல்லூரி பேராசிரியர்கள் மலர்விழி, அபிராமி, கவிதா, பங்கஜம் ஆகியோர் வழி நடத்துகின்றனர். இம்முகாம் வரும் 7ம் தேதி வரை நடக்கிறது.

# NSS CAMP
# AT THUNGAVI VILLAGE

ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி

தினகரன் 5.2.20
Pg:No: 14

## நாட்டுநலப்பணி திட்ட சிறப்பு முகாம்



▶ உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியின் என்.எஸ்.எஸ் சிறப்பு முகாம் துங்காவி கிராமத்தில் நடந்தது.

**உடுமலை, பிப்.5:** உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசால்ாட்சி மகளிர் கல்லூரியின் என்.எஸ்.எஸ் சிறப்பு முகாம் துங்காவி கிராமத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் 4ம் நாளான நேற்று துங்காவி கிராமத்தில் 25க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டது. மேலும் நுகர்வோர் மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணியை மாணவர்கள் நடத்தினர்.

ஸ்ரீ முருகன் திருமண மண்டபத்தில் மகளிர் நலம் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் விஜயலஷிதாம்பிகை சிறப்புரை ஆற்றினார்.

உடுமலை மோட்டார் வாகன ஆய்வாளர் தலைமையில் சாலை பாதுகாப்பு குறித்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இதில் சமூக ஆர்வலர்கள் நவந்தராஜா, சேதுபாலு, போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்பராமன், முகாம் திட்ட அலுவலர் மலர்விழி, பங்கஜம், அபிராமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# SKILL DEVELOPMENT TRAINING

## கல்லூரி மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

**உடுமலை, பிப். 14:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடைபெற்றது.

திறன் மேம்பாட்டு மையம் மற்றும் தொழில் முனைவோர் மையம் ஆகியன சார்பில் கடந்த 10ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை இம்முகாம் நடைபெற்றது. முகாமை கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன் தொடங்கிவைத்தார். கல்லூரி முதல்வர் எஸ்.கலைச்செல்வி முன்னிலை வகித்தார்.

இதில் வங்கித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகுப்புகள், கைவினைப் பொருள்கள் தயாரிப்பு, அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பு, தையல் பயிற்சி அளிக்கப்பட்டது. தொழில் முனைவோர் மைய ஒருங்கிணைப்பாளரும், பொருளியல் துறை தலைவருமான மா.ராதா, உறுப்பினர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# SCIENCE FESTIVAL

## அறிவியல் திருவிழா
## மாணவர்களுக்கு அழைப்பு

**உடுமலை, பிப். 21–**


அறிவியல் தினத்தையொட்டி, உடுமலையில் நாளை நடக்கும் அறிவியல் திருவிழாவில் பங்கேற்க, இன்று இறுதி பதிவு நடக்கிறது.

உடுமலை சுற்றுச்சூழல் சங்கம், கலிலியோ அறிவியல் கழகம், ஜி.வி.ஜி., கல்லூரி, ராயல்ஸ் லயன்ஸ் கிளப், தேஜஸ் ரோட்டரி சார்பில், அறிவியல் தினத்தையொட்டி, நாளை, 22ம் தேதி அறிவியல் திருவிழா நடக்கிறது. விழா, ஜி.வி.ஜி.,விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், நாளை, 22ம்தேதி காலை, 9:00 மணிக்கு துவங்குகிறது. விழாவில், பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகளும் நடக்கிறது. காலையில், வினாடி வினா, பேச்சுப்போட்டி, கட்டுரை மற்றும் ஓவியப்போட்டிகள் நடக்கிறது.

போட்டிகளைத் தொடர்ந்து, விஞ்ஞானிகளுடன் சந்திப்பு, மாணவர்களுக்கான அறிவியல் செயல்பாடுகளும் நடக்கிறது. நடப்பாண்டில் புதிதாக, மடிப்பு நுண்ணோக்கி பயிற்சி பட்டறையும் மாணவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போட்டி மற்றும் பயிற்சி பட்டறைகளில் பங்கேற்க, இன்று இறுதி பதிவு நடக்கிறது. விருப்பமுள்ள மாணவர்கள், 88835 35380, 87782 01926, 99424 67764 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் பதிவு செய்யலாம்.

# SKILL DEVELOPMENT TRAINING

## மாணவர்களுக்கு இயற்பியல் பயிற்சி




► உடுமலையில் ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் இயற்பியல் கருத்துக்களை கற்றல் என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி பட்டறை நடந்தது.

உடுமலை, பிப்.21:ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் சோதனைகளின் மூலமாக இயற்பியல் கருத்துக்களை கற்றல் என்ற ஒரு நாள் பயிற்சி பட்டறை நடந்தது. கல்லூரி, பள்ளி மாணவ மாணவிகளுக்காக நடத்தப்பட்ட இந்த பயிற்சியில் கல்லூரி முதல்வர் கலைசெல்வி, இணை பேராசிரியை நிர்மலா, சென்னை ஐ.ஐ.டி பேராசிரியர் விஜயன், ஹரீஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த முகாமில் டாப்ளர் விளைவு, புவி ஈர்ப்பு விசை, எலக்ட்ரோ மேக்னடிக் போன்றவை குறித்து விளக்கம் தரப்பட்டது. இதில் கிருஷ்ணம்மாள் கல்லூரி, கமலம் கல்லூரி, எஸ்.டி.சி, ஜி.வி.ஜி, வித்யாசாகர், பழனி அரசு கல்லூரி, உடுமலை அரசு கல்லூரி மாணவ மாணவிகள், வித்ய நேத்ரா பள்ளி, ஆர்.கே.ஆர் பள்ளி, சாந்தி, வி.ஏ.வி, எஸ்.வி.ஜி, சீனிவாசா, எஸ்.கே.பி பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# SCIENCE FESTIVAL SPEECH AND ESSAY COMPETITION

26 திருப்பூர் 24-2-2020



உடுமலையில்

## அறிவியல் திருவிழா

### மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரை போட்டி

உடுமலை, பிப்.24-

உடுமலை கலிலியோ அறிவியல் கழகம், சுற்றுச்சூழல் சங்கம், தேஜஸ் ரோட்டரி சங்கம், ஜி.வி.வி.விசாலாட்சி மகளிர் கல்லூரி அறிவியல் துறைகள், ராயல்ஸ் அரிமா சங்கம் ஆகியவற்றின் சார்பில் அறிவியல் திருவிழா உடுமலை ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நடந்தது. விழாவிற்கு கணிதத்துறைத்தலைவர் ஜெயந்தி தலைமை தாங்கினார். தேஜஸ் ரோட்டரி சங்கத்தலைவர் ரவி ஆனந்த் முன்னிலை வகித்தார். செயலாளர் சத்யம்பாபு, எஸ்.எம்.டிராவல்ஸ் நிர்வாக இயக்குனர் எஸ்.நாகராஜ் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர். முன்னதாக உடுமலை சுற்றுச்சூழல் சங்கத்தலைவர் கு.சி.மணி வரவேற்று பேசினார்.

விழாவையொட்டி 3-ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வகுப்பு வரை படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு பேச்சு, கட்டுரை, ஓவியம் மற்றும் வினாடி-வினா போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளை பூலாங்கிணர் அரசு மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் செ.சரவணன், கொடுவாயூர் ஆசிரியர் பயிற்சி மைய பேராசிரியர் வி.கண்டிமுத்து ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர். மத்திய அரசின் அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை முன்னாள் செயலாளர் டி.ராமசாமி மாணவர்களுடன் கலந்துரையாடினார். இதைத்தொடர்ந்து காரைக்குடியைச்சேர்ந்த விஞ்ஞானி எஸ்.சுதாகர், ஆராய்ச்சி துறையில் இந்தியாவின் வளர்ச்சி குறித்தும், ஆராய்ச்சி துறைகளில் ஈடுபட மாணவர்கள் தங்களை எவ்வாறு தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடினார். இதைத்தொடர்ந்து நடந்த பரிசளிப்பு விழாவில் உடுமலை ஆர்.டி.ஓ. ரவிக்குமார் போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடுமலை சுற்றுச்சூழல் சங்கச்செயலாளர் நாகராஜன் நன்றி கூறினார். 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளை கலிலியோ அறிவியல் கழக ஒருங்கிணைப்பாளர் கு.கண்ணபிரான் ஒருங்கிணைத்து நடத்தினார்.

# FOUNDER’S DAY CELEBRATION

## ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி நிறுவனர் நாள் விழா



விழாவில் மாணவிக்கு சான்றிதழ் வழங்குகிறார் கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா. உடன், கல்லூரி செயலாளர் கெ.ரவீந்திரன் உள்ளிட்டோர்.

**உடுமலை, பிப். 24:** உடுமலை ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் நிறுவனர் நாள் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

கல்லூரி செயலர் கெ.ரவீந்திரன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.கலைச்செல்வி வரவேற்றார். விழாவில் கவிஞர் மரபின்மைந்தன் ம.முத்தையா, சிறப்பு விருந்தினராக பங்கேற்று, ‘கம்பனின் கைவண்ணம்’ என்ற தலைப்பில் பேசியதாவது:

காலத்தை வென்றவர், கல்வியில் பெரியவர் கம்பர். மாணவிகள் இலக்கியம், வரலாறு, பொருளாதாரம், அறிவியல் என எந்த பாடங்களை படித்தாலும் தங்களது தனித்திறன், ஆளுமைப் பண்பு இவைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். பொறுமை, துணிச்சல், தியாகம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகியவற்றை கடைப்பிடித்து வாழ்வில் தனித்தன்மையுடன் சிறந்து விளங்க வேண்டும் என்றார்.

விழாவில், ஜிவிஜி விசாலாட்சி பள்ளி, ஜிவிஜி விசாலாட்சி கல்லூரியில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாணவி எம்.மஞ்சுளா தேவி நன்றி கூறினார்.

# THE INTER-COLLEIAETE THROWBALL COMPETITION



▶ கல்லூரிகளுக்கிடையிலான மாணவியர் பிரிவு த்ரோபால் போட்டி ஸ்ரீராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது.

## கல்லூரிகளுக்கிடையிலான த்ரோபால்

# உடுமலை ஜி.வி.ஜி கல்லூரி சாம்பியன்

கோவை ஸ்ரீராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி சார்பில் கல்லூரிகளுக்கிடையிலான மாணவியர் பிரிவு த்ரோபால் போட்டி நடத்தப்பட்டது. இதில் திருப்பூர், கோவை மாவட்டங்களை சேர்ந்த 12 அணிகள் பங்கேற்றன. நாக் அவுட் முறையில் போட்டி நடந்தது. இறுதிபோட்டியில் ஸ்ரீராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் அணியும், உடுமலை ஜி.வி.ஜி கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடந்த போட்டியில் 2-0 என்ற செட் கணக்கில் ஜி.வி.ஜி கல்லூரி அணி வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

ஸ்ரீராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும், ஸ்ரீராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும், பயனீர் கல்லூரி அணி நான்காமிடத்தையும் பிடித்தன. வெற்றி பெற்ற அணிகளை கல்லூரி முதல்வர் சித்ரா கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். உடற்கல்வி இயக்குனர் ஜாய்சி போட்டிகளை ஒருங்கிணைத்தார்.

தினகரன் 1.3.2020 கோவை செய்திகள் Pg.No:6

# SPORTS DAY CELEBRATION

## கல்லூரியில் விளையாட்டு விழா வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு



உடுமலை ஜி.வி.ஜி., கல்லூரியில் நடந்த விளையாட்டு விழாவில், வெற்றி பெற்ற மாணவியருக்கு திருப்பூர் கூடுதல் எஸ்.பி., குணசேகரன் பரிசு வழங்கினார்.

**உடுமலை, மார்ச் 5–** ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் விளையாட்டு விழா நடந்தது.

விழாவில், கல்லூரி முதல்வர் கலைசெல்வி முன்னிலை வகித்தார். உடற்கல்வி இயக்குனர் சுஜாதா வரவேற்றார். தேசிய மாணவர் படைத்தலைவர், கற்பகவள்ளி ஆண்டறிக்கை வாசித்தார்.

திருப்பூர் கூடுதல் எஸ்.பி., குணசேகரன், ஊடகங்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும், இலக்கை அடைய தொடர் முயற்சி அவசியம் என மாணவியருக்கு அறிவுறுத்தினார். மாணவியரின் அணிவகுப்பு மரியாதை நடந்தது. விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர், பேராசிரியர்களுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது. மாணவி யமுனா நன்றி கூறினார்.